

# விலங்குகள் உலகம்

-பாரவி

ஓவியம்: விஸ்வம்



நீங்கள் உங்கள் உலகத்தில்
வாழ்ந்து கொள்ளுங்கள் நாங்கள்
எங்கள் உலகத்தில் வாழ்ந்து கொள்கிறோம்
எதற்கு நாம் ஒருவர் உலகை மற்றவர்
பார்க்க வேண்டும்

பாதிப்பு என்னமோ எங்களுக்குதான் என
நீங்களும் நாங்களும்
சொல்லிக் கொள்வதை நிறுத்திக் கொள்ளலாம்
அதுதான் இயற்கையும் கூட
ஆனால் மற்றவர் உலகில் மற்றவர் நுழைந்து
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன

சொல்லிக் கொள்ளத்தான் தோன்றுகிறது
போதும் நம் ஊடுருவல்
எங்கள் வாழ்வை நாங்கள் வாழ்ந்து கொள்வதில்
நீங்கள் பார்க்க ஏதொன்றுமில்லை விலகுங்கள்
விலங்குகளே

என நாம் ஒருவரை ஒருவர் விளித்துக்
கொள்வதையும்
நிறுத்திக் கொள்ளலாம் இனி
சரிதானா
விலங்குகளே